


# வேளாண் விற்பனை (Agricultural Marketing)

R5XZZZ

> வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
> ஆராய்வான் செய்க வினை
>
> – திருக்குறள்

### கற்றல் நோக்கங்கள்

- அறிமுகம் (Introduction)
- முக்கியத்துவம் (Importance)
- கலப்படம் (Adulteration)
- தரக்கட்டுப்பாடு (Quality Control)
- தர நிர்ணய அமைப்புகள் (Quality Control Organisations)
- வேளாண் சந்தைகள் (Agricultural Markets)
- வேளாண் விளைபொருள் விற்பனை மற்றும் வணிகத்துறை (Department of Agricultural Marketing and Agri–business)

## அறிமுகம்

**வேளாண் விற்பனை** என்ற சொற்றொடரில் இரண்டு வார்த்தைகள் உள்ளன. அவை: வேளாண்மை மற்றும் விற்பனை. வேளாண்மை என்பது மனித வளத்திற்காக இயற்கை வளங்களைப் பயன்படுத்தி, விளைபொருட்களை உற்பத்தி செய்யும் செயலாகும். வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்கள் மற்றும் வேளாண் சார்ந்த பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் வணிக செயலாக்கத்திற்கு **விற்பனை** என்று பெயர்.

விற்பனை மார்க்கத்தின் பல்வேறு நிலையில் வேளாண் விளைபொருளின் உருவம் (பதப்படுத்துதல்), காலம் (சேமிப்பு), இடம் (போக்குவரத்து) மற்றும் உரிமம் மாறிக்கொண்டே இருப்பது வேளாண் விற்பனையின் குறிப்பிடத்தக்க பண்பாகும்.

விளைபொருளை திரட்டுதல் / சேகரித்தல், கையாளுதல், சேமிப்பு, போக்குவரத்து, பயன்படுத்துதல், மொத்த வியாபார விற்பனை, சில்லறை விற்பனை, ஏற்றுமதி செய்தல் மற்றும் இவற்றுக்கு துணைபுரியும் சேவைகளான சந்தைத் தகவல், தர நிர்ணயம் செய்தல், வணிகம், நிதி, விலை இடர் மேலாண்மை (Price Risk Management) மற்றும் இதன் தொடர்புள்ள நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது வேளாண் விற்பனையாகும்.

வேளாண் விற்பனையை இரு பெரும் பிரிவுகளாகப் பார்க்கலாம்.

1. விவசாயிகள் உற்பத்தி செய்த வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வது
2. விளைபொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான இடுபொருட்களை உற்பத்தி செய்வது.



AGRI_Chapter 12.indd 210 03-01-2020 15:24:43

### வேளாண் விளைபொருட்களுக்கும் புனைந்து உருவாக்கும் பொருட்களுக்கும் இடையே விற்பனையில் உள்ள வேறுபாடு

வேளாண்மை என்பது மற்ற துறைகளைக் காட்டிலும் மாறுபட்ட சிறப்பியல்புகளை உடையது. எனவே, இதன் விற்பனை, புனையப்பட்ட பொருட்களின் விற்பனையைக் காட்டிலும் சற்று வித்தியாசமானது. அதன் சிறப்பியல்புகள் யாதெனில்,

- விளைபொருளின் அழுகும் தன்மை (Perishability)
- பருவம் சார்ந்த உற்பத்தி (Seasonal)
- பேரிடம் அடைக்கும் பண்பு (Bulkiness)
- விளைபொருளின் தர வேறுபாடு (Quality Variation)
- வேளாண் விளைபொருட்களின் முறையற்ற வழங்கீடு (Irregular Supply)
- சிறு நில உடமைகள் மற்றும் பரவலான உற்பத்தி (Small Holdings and Scattered Production)
- பதப்படுத்தல் (Processing)

## 12.1 முக்கியத்துவம்

இன்றைய வேளாண்மை, பண்டைய கால வேளாண் முறையிலிருந்து வேறுபட்டுள்ளது. உயர் விளைச்சல் தரும் ரகங்கள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு இரசாயனங்களின் அதிக பயன்பாடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் காரணமாக, உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளது.

**திறன்மிகு விற்பனை அமைப்பு** என்பது,

- வளங்களை உகந்த அளவு பயன்படுத்தி, உபரியை ஈட்ட வைக்கும்.
- இடைத்தரகர்களைக் குறைத்து, விளைபொருட்களுக்கு நல்ல விலை நிர்ணயம் செய்து பண்ணை வருமானத்தை அதிகரிக்கும்.
- நாட்டின் மூலை முடுக்குகளுக்கும், வெளிநாடுகளுக்கும் கொண்டு செல்வதற்கேற்ற சந்தையை விரிவுபடுத்தும்.
- வேளாண்சார் தொழிற்சாலைகளில் வளர்ச்சியை அதிகப்படுத்தும்.
- சந்தை தேவைக்கேற்ப பொருளை உற்பத்தி செய்ய உதவும்.
- புதிய தொழில்நுட்பங்களை பின்பற்ற உதவும்.
- வேலை வாய்ப்பு ஏற்படுத்தும்.
- நாட்டின் வருமானம் உயரும்.
- விவசாயிகளின் வாழ்க்கைத்திறன் மேம்படும்.
- ஒரு பொருளின் பயன்படுதிறனை அதிகரிக்கும் (உருவம், இடம், காலம் மற்றும் உடமைக்கேற்றபடி).

வேளாண் விற்பனை உற்பத்தியையும் நுகர்வையும் தூண்டுவதோடு மட்டுமல்லாமல், பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்தும் முக்கியமான பணியைச் செய்கிறது. இதன் விரைவான செயலாற்றல் பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கிறது.

வேளாண் பொருளை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல் அதை சந்தைப்படுத்தும்போதுதான் பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும். பொருட்களை உள்நாட்டில் விற்பனை செய்வதோடு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதால், அப்பொருள் தரமுள்ளதாக இருக்க வேண்டும். உலகமயமாக்கலுக்குப்பின் அனைவருக்கும் பொருளின் தரம் பற்றிய விழிப்புணர்வு மிகுந்துள்ளது. நாம் கொடுக்கின்ற விலைக்குத் தகுந்த பொருளாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் உள்ளது. எனவே விளைபொருளின் அளவோடு, தரமும் முக்கியம். பயிர் நிலத்தில் உள்ளபோதும் தரமான முறையில் பராமரிக்கப்பட வேண்டும்; அறுவடை செய்த பின்பும் தரம் பிரித்து சேமிக்கப்பட வேண்டும்; சிப்பமிடப்பட்ட பொருள் எவ்வித சேதமும் இன்றி, நுகர்வோரை சென்றடைய வேண்டும்.

## 12.2 கலப்படம்

ஓர் உணவுப்பொருளின் இயற்கையான தன்மையும், தரமும் பாதிக்கும் விதத்தில், உணவில் வேறொரு பொருளைச் சேர்ப்பது



AGRI_Chapter 12.indd 211 03-01-2020 15:24:44

அல்லது உணவிலிருந்து மதிப்புள்ள பொருளை நீக்குவது **கலப்படம்** எனப்படும். கலப்படம் அறிந்தும், அறியாமலும், கவனக்குறைவாலும், உணவின் தரத்தை பராமரிக்க போதுமான வசதியில்லாத காரணத்தாலும் செய்யப்படலாம்.

உணவு பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதற்கும், தரம் குறைந்து இருப்பதற்கு காரணமான பொருளுக்கும், உணவோடு கலந்திருக்கும் புறம்பான பொருளுக்கும் **கலப்படப் பொருள் (Adulterant)** என்று பெயர்.

கலப்படம் செய்யப்பட்ட உணவு நச்சுத்தன்மை உடையதாகவும், உடல் நலத்தைப் பாதிக்கக்கூடியதாகவும் இருந்தால் ஆபத்தானது. மேலும், உடல் வளர்ச்சிக்குத் தேவையான அத்தியாவசியமான ஊட்டச்சத்துகள் இக்கலப்படப் பொருட்களால் உடலுக்குக் கிடைக்காமல் போகவும் வாய்ப்புண்டு.

பொதுவாக பால், பால் பொருட்கள், கோதுமை மாவு, சமையல் எண்ணெய், தானியங்கள், நறுமணப் பொருட்கள் (முழுமையானது மற்றும் தூள்), பயறு வகைகள், காஃபி, தேயிலை, சமையல் சோடா, மிட்டாய், பானங்கள், வினிகர், கடலை மாவு, மசாலா தூள் போன்றவற்றில் கலப்படம் செய்யப்படுகிறது.

2CQBL8

### 12.2.1 கலப்பட வகைகள்

**உணவு கலப்பட வகைகளும் கலப்படப் பொருட்களும்**

| வகை | கலப்படப் பொருட்கள் |
|---|---|
| அறிந்த கலப்படம் | மணல், பளிங்குக் கற்கள், கற்கள், களிமண் உருண்டை, சுண்ணாம்புத்தூள், நீர், கனிம எண்ணெய், ஆபத்து விளைவிக்கும் சாயப் பொடி |
| அறியாத கலப்படம் | உயிர்க்கொல்லி எச்சங்கள், எலிக்கழிவு, உணவில் புழுக்கள் |
| உலோகக் கலப்படம் | உயிர்க்கொல்லியிருந்து ஆர்சனிக், நீரிலிருந்து காரீயம், இரசாயன தொழிற்சாலைக் கழிவுகளில் இருந்து பாதரசம், கலன்களிலுள்ள ஈயம் |
| சிப்பமிடுவதால் உண்டாகும் இடர்கள் | பாலியெத்திலின், பாலிவினைல் குளோரைடு, இதர வளைந்து கொடுக்கக்கூடிய சிப்பமிடும் பொருட்கள் |

### 12.2.2 கலப்படப் பொருட்களின் வகைகள்

#### (i) நச்சுத்தன்மையுடைய அல்லது கேடு விளைவிக்கக்கூடிய பொருட்கள் (Poisonous or Hazardous Substances)

உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடிய அல்லது நச்சுத்தன்மையுடைய பொருட்கள் உணவில் கலந்திருந்தால் அது ஆபத்தானது.

(உ.ம்) *எஷரிகியா கோலை கலந்துள்ள ஆப்பிள் சிடர், லிஸ்டெரியா மோனோசைட்டோஜீன்ஸ் கலந்துள்ள பாலாடைக்கட்டி*

#### (ii) குப்பை மற்றும் அந்நியப் பொருட்கள் (Filth and Foreign Matter)

கண்ணாடி, உலோகம், நெகிழி, மரம், கல், மணல், சிகரெட் துண்டுகள், தாவரக்கழிவுகள், பூஞ்சை, பூச்சி மற்றும் எலிகளின் உடல் பாகங்கள், கழிவு போன்றவை.

#### (iii) பொருளாதார கலப்படம் (Economic Adulteration)

ஆலிவ் எண்ணெயில் கலக்கப்படும் தேயிலை மர எண்ணெய், புத்தம் புதிய பழங்களின் குறையை மறைக்க வண்ணம் தீட்டுவது, பொருட்களின் எடை, அளவு, அடர்த்தியை மாற்ற வேறு பொருட்களைக் கலப்பது.



AGRI_Chapter 12.indd 212 03-01-2020 15:24:44

### (iv) நுண்ணுயிர் தொற்று மற்றும் கலப்படம் (Microbial Contamination and Adulteration)

தீமை தரும் பாக்டீரியா, நச்சுயிரி, புரோட்டோசோவா போன்றவை கலந்திருந்தால், கலப்படமாகக் கருதலாம்.

(உ.ம்) புதிய பழங்களில்/காய்கறிகளில்/ இறைச்சி/ முட்டைகளில் – சால்மொனெல்லா அல்லது லிஸ்டெரியா தொற்று இருப்பது.

## 12.2.3 சந்தையில் காணப்படும் சில கலப்பட உணவுப் பொருட்கள்

| உணவுப்பொருள் | கலப்படப்பொருள் | உடல்நலக் கேடு |
|---|---|---|
| மஞ்சள், பருப்பு, பயறு வகைகள் | மெட்டனில் மஞ்சள், கேசரி பருப்பு | புற்றுநோய், வயிற்று உபாதைகள் |
| பச்சை மிளகாய், பச்சை பட்டாணி, காய்கறிகள் | மேலகைட் பச்சை, அர்ஜிமோன் விதைகள் | புற்றுநோய் (தொடர்ந்து நீண்ட காலம் உட்கொண்டால்) |
| கடுகு விதை, கடுகு எண்ணெய் | அர்ஜிமோன் மற்றும் பப்பாளி விதைகள் | தொற்று நோய் வீக்கம், கண் அழுத்த நோய் |
| பனீர், கோயா, பால், சுண்டிய பால் | ஸ்டார்ச், நீர் | வயிற்று உபாதைகள் |
| ஐஸ் க்ரீம் | பெப்பரோனில், ஈத்தைல் அசிடேட், ப்யூட்ரால்டிஹைடு, நைட்ரேட், சலவைத்தூள் போன்றவை | பெப்பரோனில் – உயிர்க்கொல்லி, ஈத்தைல் அசிடேட் – நுரையீரல், சிறுநீரகம் மற்றும் இதய நோய்கள் |
| காஃபி தூள் | புளியங்கொட்டைப் பொடி, சிக்கரி பொடி | வயிற்றுப்போக்கு, வயிற்று உபாதைகள், தலை சுற்றல், மூட்டு வலி |

மேலும்,

- பாலில் ஜெலடின் மற்றும் கெடாமல் இருக்கக் கலக்கப்படும் ஃபார்மால்டிஹைட்
- வெண்ணெயில் மாட்டுக் கொழுப்பின் உப பொருளாகிய ஒலியோமார்கரின்
- மிளகாய் தூளில் செங்கல் பொடி
- மஞ்சள் தூளில் சாயமிட்ட சுண்ணாம்பு தூள்
- இனிப்புப் பண்டங்களில் ஆபத்து விளைவிக்கும் க்ரோம் மஞ்சள், ப்ரஷியன் நீலம், சாயப்பொடிகள், தாமிர மற்றும் ஆர்சனிக் கூட்டுப்பொருட்கள்
- உலோகக் கலனில் அடைக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் ஊறுகாய்களில் தாமிர உப்புகள் போன்ற பொருட்கள் கலப்படம் செய்யப்படுகின்றன.

## 12.2.4 கலப்பட தடைச்சட்டம்

கலப்பட தடைச்சட்டம் (**Food Adulteration under the Prevention of Food Adulteration Act**) 1954 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, இந்தியா முழுவதிலும் 1955, ஜூன் 1 ஆம் தேதி அமலாக்கப்பட்டது. இது பிறகு பலமுறை திருத்தப்பட்டது. இச்சட்டம் கலப்படப்பொருள், கலப்படம் செய்யப்பட்ட உணவுகள் என்ன என்பதையும், கலப்படம் தொடர்பான பல சட்ட நுணுக்கங்களையும் தெளிவாக விளக்குகிறது. உணவு மாதிரிகளை சோதனை செய்ய மத்திய உணவு ஆய்வகங்கள் உருவாக இச்சட்டமே காரணம்.

### 12.2.4.1 உணவுத் தரம் மற்றும் பாதுகாப்பு சட்டம்

கலப்பட தடைச்சட்டத்திற்கு மாற்றாக உணவுத் தரம் மற்றும் பாதுகாப்பு சட்டம் 2006



AGRI_Chapter 12.indd 213 03-01-2020 15:24:45

(Food Standard and Safety Act of 2006) என்ற சட்டம் உருவாக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது.

இச்சட்டத்தின் கீழ் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் (FSSAI) உருவாக்கப்பட்டது. FSS சட்டம் ஏழு பழைய சட்டங்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்துள்ளது. இச்சட்டத்தின்படி எந்த உணவுத் தொழில் தொடங்குவதற்கு முன்பும் FSSAI உரிமம் பெற்றாக வேண்டும்.

FSS சட்டத்தின்படி நுகர்வோருக்கு தரமான உணவு கொடுக்கப்பட வேண்டும்; தவறான விளம்பரங்களைத் தடைசெய்து, கலப்படம் செய்பவர்களையும் தண்டித்து, நுகர்வோரைப் பாதுகாக்கிறது; மாநில அளவில் தரத்தை நிர்வகிக்கும் வழிமுறைகளையும் நெறிப்படுத்துகிறது. உணவுப்பொருட்கள் தொடர்பான வணிக செயல்களை இச்சட்டம் முறைப்படுத்துகிறது.

## 12.3 தரக்கட்டுப்பாடு

ஒரு பொருளை விற்பனை செய்ய தர நிர்ணயமும், தரம் பிரித்தலும் அவசியம். ஒரு பொருளுக்கு தர நிர்ணயம் செய்த பிறகு தான் தரம் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு விதமான தரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பொருளின் எடை, அளவு, நிறம், தோற்றம், நயம், ஈரப்பதத்தின் அளவு, இழை நீளம், அன்னியப்பொருட்களின் அளவு, கனியின் நிலை, இனிப்புசுவை, சுவை, வேதிப்பொருட்களின் அளவு ஆகிய பண்புகளைப் பொருத்து விளைபொருளின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. இப்பண்புகள் ஒரு சேர அமைந்ததே தரமாகும். வாங்குபவருக்கும் விற்பவருக்கும் தர வரைவுகளை (Specifications) ஒன்று போல இருக்குமாறு செய்வதுதான் தர நிர்ணயமாகும்.

அறுவடை செய்த வேறுபாடுடைய விளைபொருட்களை தர வரைவுகளுக்கு ஏற்றவாறு பிரிப்பதே **தரம் பிரித்தல்** ஆகும். தரம் பிரித்தலுக்குப் பின் ஒவ்வொரு குவியலும் ஒரே மாதிரியான பண்புகளை பெற்றிருக்கும். தரம் பிரித்தல் என்பது தர நிர்ணயத்திற்குப் பின்னர் செய்யும் செயலாகும்.

### 12.3.1 தர நிர்ணயத்தின் நன்மைகள்

1. விற்போருக்கும் நுகர்வோருக்கும் இடையே நம்பிக்கையை அளிக்கிறது.
2. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விற்பனையை கட்டுப்படுத்தி எளிதாக்குகிறது
3. பொருளுக்கு நிச்சய விலை உறுதி செய்யப்படுகிறது.
4. பொருளின் தரத்திற்கேற்ப உற்பத்தியாளர்களுக்கு வங்கிகள் கடன் வசதி அளிக்கிறது.
5. நுகர்வோரின் தேவையை அறிய வைக்கிறது.
6. பொருள் விரயமாவதைக் குறைக்கிறது.
7. ஒப்பந்த அடிப்படையிலான வேளாண்மைக்கு வழிவகை செய்கிறது.
8. அதிக லாபம் கிடைக்கிறது.
9. நுகர்வோருக்கு திருப்தி அளிக்கிறது.
10. போட்டிகள் நிறைந்த சந்தையில், பொருட்களுக்கு அங்கீகாரம் கிடைக்கிறது.
11. பரிமாற்றத்தில் ஏற்படும் பொருள் இழப்பு தவிர்க்கப்படுகிறது.
12. வெற்றிகரமான தொழில் நடத்த உதவி செய்கிறது.

## 12.4 தர நிர்ணய அமைப்புகள்

இந்தியாவில் உணவுப்பொருட்களின் தரத்தை நிர்ணயம் செய்யவும், உறுதிப்படுத்தவும், சான்றளிக்கவும் பல அரசு அமைப்புகள் உள்ளன. அவற்றில் முக்கியமான அமைப்புகளைப் பற்றி கீழே காண்போம்.

### 12.4.1 இந்திய தர நிர்ணய கழகம்

வணிக ரீதியாக தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் வேளாண் சார்ந்த பொருட்களுக்கு தரத்தின் அடையாளமாக இந்திய தர நிர்ணய கழகத்தால் **(Bureau of Indian Standards- BIS)** ஆய்வு செய்யப்பட்டு


AGRI_Chapter 12.indd 214 03-01-2020 15:24:45

தரச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 1991 இல் இருந்து சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான உணவு என்ற தரக் குறியீட்டினை அதாவது 'ஈகோமார்க்' கை (Ecomark) BIS வழங்குகிறது.

BIS சின்னம்

'ஈகோமார்க்' குறியீடு

### 12.4.2 அக்மார்க்

நுகர்வோருக்குத் தரமான பொருட்கள் கிடைக்க 1937 ஆம் ஆண்டு மத்திய அரசால் (விற்பனை மற்றும் ஆய்வு இயக்ககம்-Directorate of Marketing and Inspection) வேளாண்மை விளை பொருள் தரம் பிரித்தல் மற்றும் விற்பனை சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1986இல் இச்சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. வேளாண் குறியீடு (Agricultural Mark) என்பதன் சுருக்கமே அக்மார்க் (Agmark) ஆகும். இதில் தற்போது 222 வேளாண் பொருட்களுக்கு தரக் குறியீடு அளிக்கப்படுகிறது. பொருட்களின் தரம் ஆராயப்பட்டு, அதற்கான தரக் குறியீட்டை அளிப்பதே இச்சட்டத்தின் பணியாகும். அக்மார்க் முத்திரை அட்டைகள் மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படுகின்றன. இச்சட்டத்தின்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வேளாண் பொருட்களுக்கு 'அக்மார்க்' முத்திரை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுச் சந்தையில் விற்பனைக்கு உட்படுத்தப்படும் பொருட்களுக்கு விருப்பத்தின் பேரில் முத்திரை அளிக்கப்படுகிறது.

'அக்மார்க்' முத்திரை

### 12.4.3 இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம்

பட்டுக்குறியீடு

| | |
|---|---|
| சான்றிதழ் தரும் நிறுவனம் | இந்திய பட்டுக் குறியீடு நிறுவனம் |
| தொடங்கப்பட்ட வருடம் | 2004 |
| பொருள் வகை | பட்டு துணி |

இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (Food Standards and Safety Authority of India- FSSAI) என்பது இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும் அமைப்புகளில் ஒன்று. இந்த அமைப்பின் முதன்மை நோக்கம் சட்டங்களை வகுத்து, பாதுகாப்பான உணவை வழங்கி மக்களின் நலத்தைக் காப்பதாகும். எனவே FSSAI சட்டம், 2016 இன் படி உணவுத் தொழில் நடத்துபவர்கள், விநியோகிப்பவர்கள், சில்லறை வியாபாரிகள் மற்றும் சேமிப்பு கிடங்குகள் வைத்திருப்போர் FSSAI உரிமம் (License) பெற்றாக வேண்டும்.



AGRI_Chapter 12.indd 215
03-01-2020 15:24:46

### 12.4.4 பழப் பொருட்கள் ஆணை குறியீடு

இந்திய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகத்தால் இக்குறியீடு (Fruit Products Order- FPO mark) சான்றளிக்கப்படுகிறது. பழ உற்பத்தி ஆணை மூலம் தரத்தைக் குறிக்க 1955 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி, பின்னர் 2006 ஆம் ஆண்டுக்குப்பின் கட்டாய நிலையை அடைந்தது. இது இந்தியாவில் விற்கப்படும் கலனில் அடைக்கப்பட்ட பழ பானங்கள், பழக்கூழ், பழச்சாறு, ஊறுகாய் மற்றும் உலர்ந்த பழப்பொருட்களின் விற்பனைக்கு சான்றளிக்கிறது. இந்த குறியீட்டினால் தயாரிக்கப்பட்ட நுகர்வுப் பொருள் சுத்தமானது என்றும் உணவு பாதுகாப்பான சூழலில் தயாரிக்கப்பட்டது என்றும் உறுதியளிக்கிறது.

FPO முத்திரை

சைவம் மற்றும் அசைவக் குறியீடுகள்

### 12.4.5 சைவம் மற்றும் அசைவக் குறியீடுகள்

உணவு பாதுகாப்பு மற்றும் தரச் (சிப்பமிடுதல் மற்றும் அடையாளமிடுதல்) சட்டம் 2006 ன் [Food Safety and Standards (Packaging and Labelling) Act 2006] படி சைவ மற்றும் அசைவ உணவுகளை வேறுபடுத்திக் காட்ட கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட்டன. இச்சட்டம் 2011 ல் திருத்தி அமைக்கப்பட்டது. இச்சட்டத்திற்குட்பட்டு சைவ உணவுகளுக்கு பச்சை நிறக்குறியீடும், அசைவ உணவுகளுக்கு பழுப்பு நிறக்குறியீடும் (Vegetarian and Non-Vegetarian Marks) வழங்கப்படுகிறது.

### 12.4.6 வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்

வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (Agricultural and Processed Food Products Export Development Authority – APEDA) இந்திய அரசால் APEDA சட்டம்,1985 ன் படி இயற்றப்பட்டது. 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

APEDA சின்னம்

MPEDA சின்னம்

வரையறுக்கப்பட்ட உணவுப் பொருட்கள் தொடர்பான தொழிற்சாலைகள் மேம்பாடு, ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்தல், இப்பொருட்களுக்கு தர மற்றும் தர வரைவுகளை தீர்மானித்தல், பதப்படுத்தும் தொழிற்சாலைகளை ஆய்வு செய்தல், சிப்பமிடுதலை மேம்படுத்துதல், இவற்றின் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தியை ஊக்குவித்தல் போன்றவை APEDA வின் முக்கிய பணிகளாகும்.



AGRI_Chapter 12.indd 216 03-01-2020 15:24:47

வரையறுக்கப்பட்ட உணவுப்பொருட்கள் (உ.ம்) – தானியம் மற்றும் தானியப் பொருட்கள், மலர்கள், பால் பொருட்கள், காய்கறிகள், கனிகள், இறைச்சி, மூலிகைச் செடிகள், ஊறுகாய் போன்றவை.

### 12.4.7 கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்

கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், MPEDA (Marine Products Export Development Authority) சட்டம் 1972 இன் படி இந்திய அரசால் நிறுவப்பட்டது.

மீன் வளர்ப்பு மேம்பாடு, புதிய பண்ணை வளர்ச்சி, கடல் உணவு ஏற்றுமதிக்கு உள்கட்டமைப்பு வசதிகள் பதிவு செய்தல், வணிக தகவல் சேகரிப்பு மற்றும் பரப்புதல், கடல்வாழ் உணவுப் பொருட்களுக்கு தர நிர்ணயம் செய்தல், கடல் பொருட்களின் ஆய்வு, வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கு ஏற்ப கடல் உணவுப் பொருட்களின் தரத்தை பராமரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், மீன் வளர்ப்புத் தொழிலில் தொடர்புள்ளவர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற பணிகளை MPEDA செய்கிறது.

### 12.4.8 இந்திய தேயிலை வாரியம்

மத்திய அரசால் தேயிலைச் சட்டம் பிரிவு 4,1953 இன் படி சட்டபூர்வமான அங்கமாக இந்திய தேயிலை வாரியம் (Tea Board India) ஏற்படுத்தப்பட்டது. இதில் 31 அங்கத்தினர்கள் உள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்கள், தேயிலை உற்பத்தியாளர்கள், தேயிலை வணிகர்கள், முகவர்கள், நுகர்வோர், வணிக சங்கங்கள் மற்றும் தேயிலை விளைவிக்கும் முக்கிய மாநிலங்களின் அரசு அலுவலர்கள் போன்றோர் இவ்வாரியத்தின் அங்கத்தினர் ஆவர். இந்தியாவில் தேயிலை சாகுபடி மற்றும் உற்பத்தியை சீராக்குதல், ஆராய்ச்சியை ஊக்குவித்தல், தர நிர்ணயம் மற்றும் தேயிலை பரிசோதனை செய்வது குறித்த பயிற்சி அளித்தல், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்பனையை மேம்படுத்துதல் போன்ற பணிகளை தேயிலை வாரியம் மேற்கொள்கிறது.




இந்திய தேயிலை வாரியம் சின்னம்




'ஆயுஷ்மார்க்' குறியீடு

### 12.4.9 ஆயுஷ் மார்க்

இந்திய அரசின் ஆயுர்வேத, யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி அமைச்சகத்தால் (Ministry of AYUSH) கொடுக்கப்படும் குறியீடு **ஆயுஷ்மார்க்** (Ayush Mark)ஆகும். இந்திய தர குழுமம் (Quality Council of India) மற்றும் ஆயுஷ் அமைச்சகம் இணைந்து மூலிகையிலிருந்து தயாரிக்கும் பொருட்களுக்கு தர வரைவுகளை நிர்ணயம் செய்துள்ளன. இத்தரத்துடன் உள்ள பொருட்களுக்கு 'ஆயுஷ்மார்க்' என்ற தரச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இதை விருப்பத்தின் பேரில் பெற்றுக் கொள்ளலாம். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இச்சான்றிதழ் அவசியம்.

## 12.5 வேளாண் சந்தைகள்

வேளாண் விளைபொருட்களை விற்கும் இடத்திற்கு **வேளாண் சந்தை** என்று பெயர். இது பலதரப்பட்டது. சந்தையின் வகைகள் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



AGRI_Chapter 12.indd 217 03-01-2020 15:24:47

### 12.5.1 சந்தையின் வகைகள்

#### 1. சந்தை நடைபெறும் இடத்தைப் பொருத்து (On the Basis of Location)

**(i) கிராம சந்தை (Village Market)**

இது சிறு கிராமத்தில், வாங்குபவருக்கும், விற்பவருக்கும் இடையே நடைபெறும் வர்த்தகம் ஆகும்.

**(ii) முதல்நிலை மொத்த சந்தை (Primary Wholesale Market)**

இது வேளாண் விளைபொருள் உற்பத்தி செய்யப்படும் இடத்திற்கு அருகில் உள்ள நகரத்தில் நடைபெறும் சந்தை ; இதில் பெரும்பாலும் விவசாயிகளே தங்கள் விளைபொருட்களை நேரடியாக விற்பர்.

**(iii) இரண்டாம் நிலை மொத்த சந்தை (Secondary Wholesale Market)**

இது மாவட்ட தலைமையிடத்திலோ, வணிக வளாகத்திலோ ரயில் நிலையங்களுக்கு அருகிலோ நடைபெறும் சந்தையாகும்; மொத்த வியாபாரிக்கும் கிராம வியாபாரிகளுக்கும் இடையே நடைபெறும் வணிகப் பரிமாற்றமாகும்.

**(iv) முனையச் சந்தை (Terminal Market)**

விளைபொருள் நுகர்வோரிடத்திலோ, பதப்படுத்துபவரிடத்திலோ, ஏற்றுமதிக்காகக் கூடும் இடத்திலோ விற்கப்படுகிறது. பொதுவாக இச்சந்தை மும்பை, சென்னை, டெல்லி, கொல்கத்தா போன்ற பெரும் நகரங்களில் அல்லது துறைமுகங்களில் நடத்தப்படுகிறது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> டார்ஜீலிங், நீலகிரி, மூணாறு, அஸ்ஸாம், காங்ரா மற்றும் தோஆர்ஸ்–டெராய் போன்ற இடம் சார்ந்த இரகங்கள் மற்றும் பச்சை, CTC, பாரம்பரிய, ஊலாங், அங்கக, உடனடி தேயிலை மற்றும் கருந்தேயிலை போன்ற வகைகளுக்கான தர நிர்ணயத்தை தேயிலை வாரியம் உருவாக்கியுள்ளது.

#### 2. பரப்பளவைப் பொருத்து (On the Basis of Area / Coverage)

வாங்குபவரும் விற்பவரும் வணிகப்பரிமாற்றம் செய்யும் சந்தைப் பரப்பளவைப் பொருத்து, நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.

**(i) உள்ளூர் / கிராம சந்தை (Local / Village Market)**

அதே கிராமத்திலோ, அருகிலிருக்கும் கிராமங்களில் இருந்தோ வரும் வாங்குபவர் மற்றும் விற்பவருக்கிடையே நடைபெறும் சந்தை; பொதுவாக விரைவில் அழுகக்கூடிய பொருட்களை விற்க நடைபெறும் சந்தையாகும்.

**(ii) மண்டல சந்தை (Regional Market)**

இது உள்ளூர் சந்தைக்கு வரும் வாங்குபவர் மற்றும் விற்பவர்களைக் காட்டிலும் அதிகமானவர்களுக்கிடையே நடைபெறும் வர்த்தகம்; இந்தியாவில் அதிகமாக உணவு தானியங்களுக்காக இச்சந்தை நடைபெறுகிறது.

**(iii) தேசிய சந்தை (National Market)**

இது தேசிய அளவில் நடைபெறும் சந்தையாகும்; சணல், தேயிலை போன்ற நீண்ட பயன்படுகாலம் உள்ள பொருட்களுக்காக நடைபெறுகிறது.

**(iv) உலக சந்தை (World Market)**

இச்சந்தை சர்வதேச அளவில் வாங்குபவரும், விற்பவரும் கூடும் சந்தையாகும்; இது சர்வதேச அளவில் தேவை மற்றும் வழங்கீடு (Supply) உள்ள விளைபொருட்களுக்காக நடைபெறும் சந்தையாகும்.

#### 3. கால அளவைப் பொருத்து (On the Basis of Time Span)

**(i) குறுகிய கால சந்தை (Short Period Market)**

ஒரு சில மணி நேரங்களே நடைபெறும் சந்தையாகும்; விரைவில் கெட்டுப்போகும் / அழுகிப்போகும் பொருட்களான மீன், பால்,



AGRI_Chapter 12.indd 218
03-01-2020 15:24:48

காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை விற்க ஏற்படுத்தப்பட்ட சந்தையாகும்.

**(ii) நீண்ட கால சந்தை (Long Period Market)**

குறுகிய கால சந்தையைக் காட்டிலும் சற்று அதிகமான கால அளவு கொண்ட சந்தை இது; கூடுதல் காலம் சேமிக்கக்கூடிய, விரைவில் கெட்டுப்போகாத உணவு தானியங்கள், எண்ணெய்வித்துக்களுக்காக நடைபெறும் சந்தையாகும். விற்பவர் மற்றும் வாங்குபவரே விலை நிர்ணயம் செய்கின்றனர்.

**(iii) நிலையான சந்தை (Secular Market)**

இது நிலைத்த தன்மையுடைய சந்தையாகும். இங்கு நீண்ட காலம் சேமிக்கக்கூடிய மற்றும் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் வணிகம் செய்யப்படுகின்றன (உ.ம்) இயந்திரங்கள், புனையப்பட்ட பொருட்கள்.

### 4. பரிமாற்றம் செய்யப்படும் கொள்ளளவைப் பொருத்து (On the Basis of Volume of Transaction)

இது இரண்டு வகைப்படும்.

**(i) மொத்த வியாபாரச் சந்தை (Wholesale Market)**

இது மிக அதிக அளவிலான பொருட்களின் வணிகத்திற்காக நடைபெறும் சந்தையாகும். இது வியாபாரிகளுக்கிடையே மட்டுமே நடைபெறுகிறது.



**(ii) சில்லறை வியாபாரச் சந்தை (Retail Market)**

இது நுகர்வோரின் தேவைக்கேற்ப, மொத்த வியாபாரிகளிடமிருந்து சில்லறை வியாபாரிகள் வாங்கி விற்கும் இடமாகும். இது நுகர்வோருக்கு அருகாமையில் உள்ள சந்தையாகும்.



### 5. வர்த்தகப்பரிமாற்றம் செய்யப்படும் தன்மையைப் பொருத்து (On the Basis of Nature of Transaction)

இது இரண்டு வகைப்படும்.

**(i) உடனடி பணப்பரிமாற்ற சந்தை (Spot or Cash Market)**

இது பொருளைப் பெற்றவுடன் பணப்பரிமாற்றம் செய்யும் சந்தை.

**(ii) முன்னோக்கிய சந்தை (Forward Market)**

இது எதிர்கால தேதியில் ஒரு குறிப்பிட்ட பொருளை, ஒரு குறிப்பிட்ட அளவு வாங்கல் / விற்றல் ஆகும். பொருள் விநியோகம் மற்றும் பணப்பரிவர்த்தனையிலுள்ள வேறுபாட்டை, சிறிது காலம் கழித்து செலுத்தும்/வாங்கும் வணிகத்துக்கு முன்னோக்கிய சந்தை என்று பெயர். இது ஒரு நவீன வர்த்தக முறையாகும்.

### 6. பரிமாற்றத்துக்கு உட்பட்ட பொருட்களின் எண்ணிக்கையைப் பொருத்து (On the Basis of Number of Commodities in which Transaction takes place)

இது இரு வகைப்படும்.

**(i) பொதுச் சந்தை (General Market)**

எல்லா விதமான வேளாண் விளைபொருட்களையும் (உ.ம்) உணவு தானியங்கள், எண்ணெய்வித்துகள், நார், வெல்லம் ஆகியவற்றை வாங்கும் / விற்கும் சந்தை.



AGRI_Chapter 12.indd 219 03-01-2020 15:24:49

### (ii) சிறப்பு சந்தை (Specialized Market)

ஓரிரு பொருட்களுக்காக நடத்தப்படும் சந்தை சிறப்பு சந்தையாகும். ஒவ்வொரு வகை பொருட்களுக்கும், தனித்தனி சந்தை உண்டு. (உ.ம்) தானிய சந்தை, காய்கறி சந்தை, கம்பளி சந்தை, பருத்தி சந்தை, மீன் சந்தை.



## 7. போட்டியின் தன்மையைப் பொருத்து (On the Basis of Degree of Competition)

இது முழுமையான மற்றும் முழுமையற்ற சந்தை என பிரிக்கப்படுக்கிறது

### (i) முழுமையான சந்தை (Perfect Market)

அ. அதிக எண்ணிக்கையில் வாங்குபவரும் விற்பவரும் இருப்பார்கள்.

ஆ. அனைவருக்கும் தேவை, வழங்கீடு மற்றும் விலை நிலவரம் பற்றிய தெளிவான அறிவுண்டு.

இ. உபரியாகவோ பற்றாக்குறையாகவோ உள்ள பகுதியைத் தவிர்த்து, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பரந்த நிலப்பரப்பில், விலை சீராக இருக்கும்.

ஈ. வெவ்வேறு நேரங்களில் மாறும் சேமிப்பு செலவை தவிர, ஓரிடத்தில் நீண்ட காலத்திற்கு பொருளின் விலை சீராக இருக்கும்.

உ. ஒரு வடிவத்தில் இருந்து வேறொரு வடிவத்துக்கு மாற்றும் செலவைத் தவிர, ஒரு பொருளின் வெவ்வேறு வடிவங்களின் விலை சீராக இருக்கும்.

### (ii) முழுமையற்ற சந்தை (Imperfect Market)

#### அ. ஏகபோக உரிமையுள்ள சந்தை (Monopoly Market)

ஒரு பொருளுக்கு ஒரு விற்பனையாளரே இருப்பார். விலையை அவரே நிர்ணயம் செய்வார். எனவே மற்ற சந்தைகளைக் காட்டிலும் விலை அதிகமாக இருக்கும்.

#### ஆ. இரு முற்றுரிமைச் சந்தை (Duopoly Market)

ஒரு பொருளுக்கு இரு விற்பனையாளர்கள் இருப்பார்கள். இருவரும் இணைந்து விலை நிர்ணயிப்பார்கள். பொதுச்சந்தையில் நிலவும் விலையை விட சற்று அதிகமாக இருக்கும்.

#### இ. சிலருரிமைச் சந்தை (Oligopoly Market)

இருவருக்கு மேல், ஆனால் வெகு சிலரே விற்பனையாளர்களாக இருக்கும் சந்தைக்கு சிலருரிமைச் சந்தை என்று பெயர்.

#### ஈ. முற்றுரிமைப் போட்டி (Monopolistic Competition)

ஒரு பொருளின் வேறுபட்ட உருவமுள்ள பொருட்களுக்கு பல விற்பனையாளர்கள் இருந்தால், அது முற்றுரிமைப் போட்டி எனப்படுகிறது. பொருளின் வேறுபாடு அதன் மாறுபட்ட வணிகக்குறியால் (Trade Mark) வெளிப்படையாகத் தெரியும். ஒரே அடிப்படைப் பொருளுக்கு வித்தியாசமான விலைகள் நிலவும்.

இது இடுபொருள் சந்தையில் தெள்ளத் தெளிவாகக் காணப்படும் (உ.ம்) உயிர்க்கொல்லி மருந்துகள், உரங்கள், கருவிகள்.

## 8. பொருளின் தன்மையைப் பொருத்து (On the Basis of Nature of Commodities)

### (i) பண்டச் சந்தை (Commodity Market)

இது சரக்கு மற்றும் மூலப்பொருட்களோடு தொடர்புடைய சந்தை; கோதுமை, பார்லி, பருத்தி, உரம், விதை போன்றவற்றிற்கான சந்தை, பொருட்சந்தை / பண்டச் சந்தை எனப்படும்.

### (ii) மூலதன சந்தை (Capital Market)

பத்திரங்கள், பங்குகள் மற்றும் முதலீட்டு உரிமைகள் வாங்குதல்/ விற்றல் மூலதன சந்தையாகும் (உ.ம் பங்குச்சந்தை).



AGRI_Chapter 12.indd 220 03-01-2020 15:24:49

### 9. விற்பனை நிலையைப் பொருத்து (On the Basis of Stage of Marketing)

**(i) உற்பத்தி சந்தை** (Producing Market)

ஒரு பொருளை வேறு சந்தையில் விற்பதற்காக திரட்டி வைக்கும் சந்தை உற்பத்தி சந்தையாகும். இது உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு அருகில் இருக்கும்.

**(ii) நுகரும் சந்தை** (Consuming Market)

நுகர்வோருக்காக பொருட்களை சேகரித்து வைக்கும் சந்தை ஆகும். இது உற்பத்தி போதுமானதாக இல்லாத இடங்களிலும், மக்கள் தொகை அதிகம் உள்ள நகர்ப்புறங்களிலும் காணப்படும்.

### 10. பொதுமக்கள் தலையீட்டின் எல்லையைப் பொருத்து (On the Basis of Extent of Public Intervention)

**(i) ஒழுங்குமுறைச் சந்தை** (Regulated Market)

MR9XSP

வெவ்வேறு பிரிவினைச் சேர்ந்த, சட்டபூர்வமான சந்தை நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு வணிகம் நடத்தப்படும் சந்தைக்கு ஒழுங்குமுறை சந்தை (விற்பனைக்கூடம்) என்று பெயர். இந்த சந்தையில் விற்பனை விலை வரையறுக்கப்பட்டிருக்கும்; சந்தை செயல்முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.



**(ii) ஒழுங்குமுறையற்ற சந்தை** (Unregulated Market)

இது எவ்வித விதிகளும், கட்டுப்பாடுகளும் இல்லாமல் இயங்கும் சந்தையாகும்; வியாபாரிகளே விதிகளை அமைத்துக் கொள்வார்கள்; அவர்களே சந்தையை நடத்துவார்கள். இதில் நிறைய குறைபாடுகள் காணப்படும். விற்பனை செயல்களுக்கு வரையறுக்கப்படாத கட்டணம் வசூலிக்கப்படும் ; ஒழுங்கற்ற முறையில் விலை நிர்ணயம் செய்யப்படும்.

### 11. எவ்வகை மக்களுக்கு பரிமாற்றப்படுகிறது என்பதைப் பொருத்து (On the Basis of Type of Population)

**(i) நகர்புறச் சந்தை** (Urban Market)

இது நகர்ப்புற பகுதிகளின் தேவையோடு தொடர்புடையது.

**(ii) கிராமப்புற சந்தை** (Rural Market)



இது கிராமப்புற மக்களின் தேவையைப் பொருத்து நடைபெறும் சந்தையாகும். நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள வணிகம் சற்று வித்தியாசமானது.

### 12. விற்பனை விளிம்பின் வளர்ச்சியைப் பொருத்து (On the Basis of Accrual of Marketing Margins)

யாருக்கு விற்பனை விளிம்பின் வளர்ச்சி சேர்கிறது என்பதைப் பொருத்து சந்தை வகைப்படுத்தப்படுகிறது.

இச்சந்தைகளைத் தவிர, தற்பொழுது உள்ள கணினிமயமான உலக சூழலில் இணைய வணிகம் அல்லது இணைய சந்தை என்பது இன்றியமையாததாகிவிட்டது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் கணினி



AGRI_Chapter 12.indd 221 03-01-2020 15:24:50

மற்றும் இணையதளம் பற்றிய விழிப்புணர்வு வந்துவிட்டதால் அவர்கள் பாரம்பரிய சந்தை நிகழ்வோடு, இணையதள சந்தையை பெரும்பாலும் நாடுகின்றனர். போக்குவரத்து, சேமிப்பு, பதப்படுத்துதல், சிப்பமிடுதல், உரம், பயிர் பாதுகாப்பு இரசாயனங்கள், பண்ணைக் கருவிகள், இயந்திரங்கள் போன்றவற்றை வாங்குவதற்கும் மின்சாரம் மற்றும் பழுது நீக்குதல் போன்ற சேவைகளுக்கும் இணையதளத்தை நாடுகின்றனர். தங்கள் விளைபொருட்களை இடைத்தரகர்கள் இல்லாமல் விற்கவும், இடுபொருட்களை வாங்கவும் இணைய சந்தை (Online Marketing / Digital Marketing / e-Marketing / Internet Marketing) பயன்படுகின்றது. விளைபொருட்களின் உலக அளவிலான விலை நிலவரத்தை எளிதில் அறிந்து ஏற்றுமதி/ இறக்குமதி செய்ய உதவுகிறது.

eNAM राष्ट्रीय कृषि बाजार
NATIONAL AGRICULTURE MARKET

இந்திய அரசால் விவசாயிகளின் வசதிக்காக வேளாண் பொருட்களை வர்த்தகம் செய்ய ஏற்படுத்தப்பட்ட இணையதளம் e-NAM (National Agriculture Market - தேசிய வேளாண் சந்தை) ஆகும். 16 மாநிலங்கள், இரண்டு யூனியன் பிரதேசங்களிலுள்ள 585 சந்தைகள் மற்றும் 45 இலட்சம் வேளாண் உறுப்பினர்களை ஒன்றிணைத்து, 90க்கும் அதிகமான பொருட்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் வணிகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தரமான பொருட்களை, ஒரே இடத்தில் மொத்தமாக கொள்முதல் செய்ய முடிகிறது. இடைத்தரகரில்லா வாணிபம், கட்டுப்பாடற்ற வாணிப உரிமம், வேளாண் விளைபொருளுக்கான பொதுவான தர நிர்ணய அளவீடுகள், குறிப்பிட்ட சந்தையில் அல்லது அருகில் மண் பரிசோதனைக் கூடங்களை அமைத்தல் போன்றவை இதன் முக்கிய குறிக்கோள்களாகும்.

CJHM7G

## 12.6 வேளாண் விளைபொருள் விற்பனை மற்றும் வணிகத்துறை

தமிழ்நாட்டில் இத்துறை 1977 இல் இருந்து விளைபொருள் விற்பனைத் துறை (Department of Agricultural Marketing) என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. 2001 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனை மற்றும் வணிகத்துறை (Department of Agricultural Marketing and Agri–business) என்று பெயர் மாற்றப்பட்டது. வேளாண் ஏற்றுமதி, அறுவடைக்குப் பின் மேம்பாடு, உணவு பதப்படுத்துதல் போன்ற இதர பணிகளையும் செயல்படுத்துகிறது.

### 12.6.1 செயல்பாடுகள்

- விவசாயிகள் மற்றும் நுகர்வோருக்காக உழவர் சந்தையைத் தொடங்குதல் மற்றும் பராமரித்தல்
- சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பழங்கள், காய்கறிகள், மலர்களின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஏற்றுமதிக்கான விற்பனை வாய்ப்பினை ஏற்படுத்துதல்
- ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை தொடங்குதல் மற்றும் பராமரித்தல்
- ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தரம் பிரிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு விளைபொருட்களின் விலையை உயர்த்துதல்
- தரம் பிரித்தல், மதிப்பூட்டப்படுதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை பற்றிய விழிப்புணர்வை விவசாயிகளுக்கிடையே ஏற்படுத்துதல்
- வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை நிறுவுதல், விவசாயிகளுக்கு அறுவடை பின் தொழில்நுட்பங்கள், கட்டமைப்பு வசதிகள், பன்னாட்டு விபரங்களைத் தெரிவித்தல் போன்ற பணிகளைச் செய்தல்
- நுகர்வோர் நன்மைக்காக வேளாண்சார் பொருட்களுக்கு 'அக்மார்க்' குறியீடு வழங்குதல்
- நவீன குளிர்பதன கிடங்குகளை அமைத்தல்



AGRI_Chapter 12.indd 222 03-01-2020 15:24:51

- உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல், விளைபொருட்கள் வீணாவதை குறைத்தல், அன்னிய செலாவணியை உயர்த்துதல்
- கிராமங்களில் உலர் களம் அமைத்தல்

போன்ற திட்டங்கள் இத்துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

வேளாண் விற்பனை என்பது வேளாண் தொழிலின் முக்கியமான அங்கமாகும். தற்போதைய விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தோடு போட்டி போட்டுக்கொண்டு நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய துறையாக இது மாறிவிட்டது. உற்பத்தி சார்ந்த தொழிலாக இல்லாமல், சந்தை சார்ந்த தொழிலாக வேளாண்மை மாறிவிட்டதால், நுணுக்கமாக வேளாண் பொருட்களை விற்பனை செய்வது அவசிமாகும்.

### பழமொழி

- அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக் கட்டி மூன்று வேண்டும்
- ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை
- தங்கம் தரையிலே தவிடு பானையிலே

## சொற்பொருட்களஞ்சியம்

| | |
|---|---|
| உருவம் | Form |
| வழங்கீடு | Supply |
| புனையப்பட்ட | Manufactured |
| திரட்டுதல் | Assemble |
| கையாளுதல் | Handling |
| ஏற்றுமதி | Export |
| வணிகம் | Business |
| தர வரைவுகள் | Standards, Specifications |
| தர நிர்ணயம் | Standardization |
| தரம் பிரித்தல் | Grading |
| விரயம் | Wastage |
| உரிமம் | License |
| அடைக்கப்பட்ட | Packed |
| பழக்கூழ் | Jam |
| சிப்பமிடுதல் | Packaging |
| அடையாளமிடுதல் | Labelling |
| அடையாள அட்டை | Label |
| குறியீடு | Mark |
| உணவுப் பாதுகாப்பு | Food safety |
| கலப்படப் பொருள் | Adulterant |
| சந்தை, விற்பனை | Market, Marketing |
| பரிமாற்றம் | Transaction |
| செலவு | Cost, Expenditure |
| ஒழுங்குப்படுத்தப்பட்ட | Regulated |
| விளிம்பு நிலை | Margin |
| வளர்ச்சி சேருதல் | Accrual |
| கட்டணம் | Charge |

## மதிப்பீடு

UJM38A

### I. பொருத்தமான விடையளி (ஒரு மதிப்பெண்)

1. உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் வணிக செயலாக்கத்திற்கு __________ என்று பெயர்.

   (அ) விற்பனை

   (ஆ) பதப்படுத்துதல்

   (இ) சேமிப்பு

   (ஈ) போக்குவரத்து

2. வேளாண் பொருளை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், அதை __________ போதுதான் பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும்.

   (அ) சுத்தம் செய்யும்

   (ஆ) தரம்பிரிக்கும்

   (இ) சந்தைப்படுத்தும்

   (ஈ) பதப்படுத்தும்



AGRI_Chapter 12.indd 223 03-01-2020 15:24:51

3. விளைபொருளை தர வரைவுகளுக்கு ஏற்றவாறு பிரிப்பது __________ எனப்படும்.

(அ) சுத்தம் செய்தல்

(ஆ) தர நிர்ணயம் செய்தல்

(இ) விற்பனை

(ஈ) தரம் பிரித்தல்

4. தர நிர்ணயம் விற்போருக்கும் நுகர்வோருக்கும் இடையே __________ அளிக்கிறது.

5. 'ஈகோமார்க்' எனும் குறியீடை __________ வழங்குகிறது.

(அ) BIS (ஆ) FSSAI

(இ) APEDA (ஈ) MPEDA

6. சைவ உணவுகளுக்கு __________ நிறக் குறியீடு இடப்படுகிறது.

(அ) பழுப்பு (ஆ) நீலம்

(இ) மஞ்சள் (ஈ) பச்சை

7. அசைவ உணவுகளுக்கு __________ நிறக் குறியீடு இடப்படுகிறது.

(அ) பச்சை (ஆ) பழுப்பு

(இ) நீலம் (ஈ) மஞ்சள்

8. வேளாண் விளைபொருட்களை விற்கும் இடத்திற்கு __________ என்று பெயர்.

9. ஏகபோக உரிமையுள்ள சந்தையில் __________ விற்பனையாளர் (விற்பனையாளர்கள்) இருப்பார் (இருப்பர்).

(அ) 2 (ஆ) சிலர்

(இ) 1 (ஈ) பலர்

10. மூலதன சந்தையில் __________ விற்கப்படும்.

(அ) உரம் (ஆ) விதை

(இ) பங்குகள் (ஈ) விளைபொருள்

## II. நான்கு வரிகளில் விடையளி (மூன்று மதிப்பெண்கள்)

11. வேளாண் விற்பனை என்றால் என்ன?

12. வேளாண் விற்பனை எச்செயல்களை உள்ளடக்கியது?

13. கலப்படம் என்றால் என்ன?

14. கலப்படப் பொருள் என்பது என்ன?

15. கலப்படத்தால் ஏற்படும் தீமைகள் யாவை?

16. **பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| i | உலோகக் கலப்படப் பொருள் | 1 | புழுக்கள் |
| ii | அறிந்த கலப்படப் பொருள் | 2 | ஆபத்து விளைவிக்கும் சாயப்பொடி |
| iii | அறியாத கலப்படப் பொருள் | 3 | நீரிலிருந்து காரீயம் |

(அ) 3, 2, 1 (ஆ) 1, 2, 3

(இ) 1, 3, 2 (ஈ) 2, 3, 1

17. **பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| i | பொருளாதார கலப்படம் | 1 | *சால்மொனெல்லா* |
| ii | நுண்ணுயிர் தொற்று மற்றும் கலப்படம் | 2 | தாவரக் கழிவுகள் |
| iii | அந்நியப் பொருள் | 3 | பொருட்களின் எடை |

(அ) 3, 2, 1 (ஆ) 3, 1, 2

(இ) 1, 3, 2 (ஈ) 2, 3, 1

18. விளைபொருளின் தரம் என்றால் என்ன?

19. BIS பற்றி குறிப்பு வரைக.

20. FSSAI பற்றி சிறு குறிப்பு வரைக.

21. APEDA வின் பணிகள் யாவை?

22. 'ஆயுஷ்மார்க்' பற்றி குறிப்பு வரைக.

23. முன்னோக்கிய சந்தை என்றால் என்ன?

24. சிறப்பு சந்தை – குறிப்பு வரைக.



AGRI_Chapter 12.indd 224 03-01-2020 15:24:51

### III. குறுகிய விடையளி
### (ஐந்து மதிப்பெண்கள்)

25. வேளாண் விளைபொருட்களுக்கும், புனைந்து உருவாக்கும் பொருட்களுக்கும் இடையே விற்பனையில் உள்ள வேறுபாடுகள் யாவை?
26. உணவுத் தரம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் பற்றி விவரி.
27. அக்மார்க் பற்றி குறிப்பு வரைக.
28. தேயிலை வாரியம் பற்றி எழுதுக.
29. e–NAM பற்றி குறிப்பு வரைக.

### IV. விரிவான விடையளி
### (பத்து மதிப்பெண்கள்)

30. கலப்படப் பொருட்களின் வகைகளை விவரி.
31. தர நிர்ணயத்தின் நன்மைகளை எழுதுக.
32. போட்டியின் தன்மையைப் பொருத்து சந்தை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
33. விரிவாக விடையளி:

    (அ) ஒழுங்குமுறைச் சந்தை

    (ஆ) ஒழுங்குமுறையற்ற சந்தை
34. வேளாண் விளைபொருள் விற்பனை மற்றும் வணிகத்துறையின் செயல்பாடுகளை விவரி.

## ஆசிரியர் செயல்பாடு

1. வேளாண் விற்பனையின் முக்கியத்துவம் மற்றும் கலப்படம் பற்றி விவரித்தல்.
2. தரக் கட்டுப்பாடு பற்றி எடுத்துரைத்தல்.

## மாணவர் செயல்பாடு

1. கலப்படம் செய்யப்படும் பொருட்களை பற்றி பட்டியல் தயாரித்தல்.
2. தங்கள் பகுதியில் கூடும் சந்தை பற்றியும், சந்தையில் உள்ள பொருட்கள் மற்றும் விற்பனை விலை பற்றிய விவரங்கள் சேகரித்தல்.

## பார்வை


1. www.hillagric.ac.in>coa>Agecon 244
2. https://shodhganga.inflibnet.ac.in >chapter–iii
3. https://en.m.wikipedia.org/wiki/certification_marketing_ India
4. https://en.m.wikipedia.org/wiki =/Bureau_of_India_Standards
5. www.shodhganga .inflibnet.ac.in>bitstream –overview of agricultural marketing
6. www.elearn . luanar. ac.mw>AECO242>lec01
7. www.vikaspedia.in/health
8. www.cii–ig.in
9. www.indiastandardsportal.org
10. https://ayushmanbharath.net
11. www.agritech.tnau.ac.in
12. www.arthapedia.in